# ஞான வாழ்வு



இறைவன் ஞானவெளி மெய்பிரான் ஞானசித்தர்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வாழ்வு - 1

என்செய்தோம் ஏதுசெய்தோம் யார்க்குசெய்தோம்
என்றெண் ணாதுஇப் பிறவியில்
தன்குற்றம் காணாதுப் பிறர்குற்றம்
தான்தேடி அலைவார்க்கு உணர்வேது
முன்செய்த வினைத்தந்த பிறவிதுயர்
தீருமுன் வினைத்தேடித் திரியாது
இன்னுமோர் பிறவிவேண் டாமென்று
இருப்பதே மண்ணில் ஞானவாழ்வு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வாழ்வு - 2

வந்த பிறவி தெரியாது
வாழும் நிலையும் புரியாது
சொந்த உறவு யாரென்று
சோதித் தறிய முடியாது
இந்த மண்ணே நிலையென்று
இறுமாந் திருக்கும் மானுடர்க்கு
சிந்தை சிறக்க வழிகாட்டும்
ஞான வாழ்வே முறையாகும்.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வாழ்வு - 3

இலை என்னாது ஈக
இருப்பதைக் கொண்டு மகிழ்க
வலைப் பட்டதை உணர்ந்து
வகைத் தேடி வெல்க
கலை யுற்றதை அறிந்து
கணக்காகத் தினமும் முயல்க
தலையாகக் குருவைப் பெற்றுத்
தெளிவதே ஞான வாழ்வு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வாழ்வு - 4

வானமும் மண்ணும் நீரும்
வளியுடன் தேயும் சேர்த்து
கானமும் கடலும் மலையும்
காட்சியில் மலர்ந்த பூவும்
மானமும் மதியும் கொண்ட
மனிதனோ டுயிர்கள் யாவும்
தானவை வந்த நோக்கம்
தெரிவதே ஞான வாழ்வு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வாழ்வு - 5

வாசம் அறிந்து வாழ்வதே
வாழ்க்கை யென்று உணர்ந்திடில்
பாசம் வைக்கும் இடமெலாம்
பரமன் தோற்றம் காணுமே
வீசும் இன்பத் தென்றலே
விரவி நிற்கும் மனதிலே
பேசும் இனிமை மொழியைப்போல்
உதவும் ஞான வாழ்வுமே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வாழ்வு - 6

நினைப்பும் மறப்பும் வந்தவழி

எங்கென்றுத் தேடி அறிந்திட

நினைத்திட வேண்டும் குருவை

நிதநிதமும் நின்மதியே சரணென்று

நினைவொடுங்கி நிர்மலமா யாகுதற்கு

நிலையற்றப் பொருள்மீதுப் பற்றழித்து

நினைவுதவம் கொண்டார்க்கே வந்தெய்தும்

நித்திலத்தில் நிச்சயமாய் ஞானவாழ்வு.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்ப்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வாழ்வு - 7

தெரிதல் யாவும் வரமாமோ
　　தெளித லிலாமல் பலனாமோ
தெரிதல் தேடி அலையாமல்
　　இயல்பா யிருத்தல் இழப்பாமோ
தெரிதல் முதலில் குருவென்றால்
　　நினைப்பில் பிசகல் வருமாமோ
தெரிதல் தன்னை யெனவுணர்ந்து
　　அடங்கல் ஞான வாழ்வாமே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!

வாழ்வோம்! வாழ்விப்போம்!!



இறைவன் ஞானவெளி மெய்பிரான்
ஞானசித்தர்

திருச்சிற்றம்பலம்

# ஞான வாழ்வு - 8

வானம் பார்த்த வாழ்க்கையினைப்
பெற்றது இந்த மண்ணுயிர்கள்
தானம் தவத்தைச் செய்வதனால்
தீர்ந்திடும் முன்னைப் பழவினைகள்
ஊனக் கண்களை வெளிமூடி
உற்றுப் பார்த்து அகக்கண்ணை
மோன நிலையில் திறப்பார்க்கு
அமைவது ஞான வாழ்வாமே.

திருச்சிற்றம்பலம்

வாழ்வோம்! வாழ்விப்போம்!!